

வைகாசி 1988 வெளியீடு—2

விலை ரூ. 2/-

சென்னையில் மறுபதிப்பு

# புதிய கண்ணோட்டம்
# NEW PERSPECTIVE

## தோழர் ஐயா படுகொலை

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தாபகர்களில் ஒருவரும் மத்தியகுழு உறுப்பினருமான தோழர் ஐயா, மக்கள் விரோத கொலைகாரர்களான உமாமகேஸ்வரன் தலைமையிலான நன்றிகெட்ட PLOT கும்பலினால் நயவஞ்சகத்தனமாக படுகொலை செய்யப்பட்டு விட்டார்.

இந்தப் புளொட் கும்பலுக்கு உதவி செய்து கொண்டிருந்ததன் விளைவாகவே EPRLF-ன் மத்திய குழு உறுப்பினராகிய தோழர் நடேசலிங்கம் 1981-ம் ஆண்டு சிறீலங்கா இராணுவத்தினால் வவுனியாவில் வைத்து கொலை செய்யப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



ஈழ விடுதலைப் போராட்டத்திற்காகவும், அதனுடான சமூக மாற்றத்திற்காகவும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேல் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்துக் கொண்ட தோழர் வேதநாயகம் பத்திமநாயகம்(ஐயா)அவர்கள். உமா மகேஸ்வரன் தலைமையிலான 'புளொட்' இயக்கத்தினரால் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

வவுனியா, மன்னார் மாவட்டத்தில் தோழர் ஐயாவின் தலைமையில் நடைபெற்று வந்த எமது அரசியல் வேலைகளால் நிலைகுலைந்து போன இக் கும்பல் ஐயாவைக் கொலை செய்ததன் மூலம் தாம் அப்பிராந்தியத்தின் முடிசூடா மன்னர்களாகத் திகழலாம் என பிரமை பிடித்து அலைகின்றனர். புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்து தன்னை நிலை நிறுத்த முற்பட்டதுவும் இதுவும் அளவுரீதியாக வித்தியாசப்படலாமே தவிர, குணாம்சரீதியில் ஒரே வகைப்பட்டவைதான்.

மாக்சிய லெனினிய கருத்துக்களில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த தோழர் ஐயா, வெறும் தத்துவ வாதியாக மாத்திரம் இருக்காது தனது நடைமுறை வாழ்க்கையில் அதைக் கடைப்பிடித்து வந்ததுடன. அரசியல் பொருளாதார சமூக விடுதலை ஒன்றினூடாக மாத்திரமே எமது மக்கள் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் என்று உறுதியாக நம்பினார். அதற்காகவே தனது வாழ்நாளின் அனைத்து நிமிடங்களையும் செலவு செய்தார்.

மூன்று குழந்தைகளின் தந்தையாகிய தோழர் ஐயா அவர்கள் தனது குடும்பத்தைக் கவனிப்பதற்கு சிறிது நேரத்தையும் ஒதுக்கியது கிடையாது. மாறாக, மக்களின் விடுதலை ஒன்றே அவரின் குறிக்கோளாகவும் உயிர்மூச்சாகவும் இருந்தது.

தோழர் ஐயாவால் உருவாக்கப்பட்ட தோழர்களுக்கும், அவருள்ளும், அவருடனும் வாழ்ந்த மக்க

ளுக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களுக்கும், சிறை-வதை முகாம்களில் அவருடன் வாழ்ந்த சகபோராளிகளுக்கும்—அந்த உண்மை மனிதனிடமிருந்த தோழமையுணர்வின் மேன்மை தெரியும்...அவரது சகிப்புத் தன்மையும், அவர் மனிதர்கள்பால் கொண்டிருந்த நேசமும் புரியும்.........

தோழர் ஐயாவையும், மற்றும் தோழர்களான சாரங்கன், பாபு, தங்கேஸ், ரவி, பபா, ஆகியோரையும் உடல்ரீதியாக இக்கும்பல் அழித்திருப்பினும், அவர்களுடைய இலட்சியங்கள்-கொள்கைகள்-அபிலாசைகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

ஐயா எவ்வழியில் தனது மக்களுக்கு சேவை செய்தாரோ, அவ்வழியில் தொடர்ந்து செல்ல உறுதி பூணுவோம். ○

### ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

# மே தினச் செய்தி

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து ஆட்சியதிகாரத்தை ஏற்றுக் கொண்டு கடந்த 40 ஆண்டு காலமாக இந்நாட்டை ஆண்டு வந்துள்ள முதலாளித்துவ ஆளும் கும்பல்கள் இந்நாட்டு மக்களுக்கு வழங்கியிருப்பதெல்லாம் அடக்குமுறை, யுத்தகளம், மரண பயம், பொருளாதார நெருக்கடிகள், சமுதாய கலாச்சாரச் சீரழிவுகள், அரசியல் ஸ்திரமின்மை என்பவைகளே.

இவை மட்டுமல்லாது இவற்றின் மறுபக்க விளைவுகளாக இனவாத அரசியலே மக்களைப் பீடித்து நிற்கின்றது; இனவெறி அடிப்படையிலான பாசிச அராஜகக்குழுக்கள் கொலைவெறி, கொள்ளைவெறி, அதிகார வெறி பிடித்து கொடூர தாண்டவமாடி நாட்டையும் மக்கள் வாழ்வையும் சிதைத்தழித்து வருகின்றன. இந்த நாட்டில் வளர்க்கப்பட்டுள்ள-வளர்ந்துள்ள அரசியல் குழப்பங்களின் காரணமாக, இந்த நாடு எங்கே நோக்கி போய் கொண்டிருக்கின்றது? இந்த நாட்டில் அமைதியையும், ஜனநாயகத்தையும், ஒற்றுமையையும் உருவாக்கவழியென்ன? இந்த நாட்டு மக்களின் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? ஆகிய கேள்விகளுக்கான விடைகள் பற்றி மக்கள் மத்தியில் குழப்பகரமான சிந்தனைகளே நிலவுகின்றன.

இவ்வாறான நிலைமைகளின் மத்தில் இருந்தே இலங்கை வாழ் தொழிலாளவர்க்கமும் மற்றும் உழைக்கும்மக்களும் சர்வதேச தினமான மே தினத்தை நினைவு கூர வேண்டியுள்ளது. 1988 இன் இந்த மே தினத்தை வெறுமனே சம்பிரதாய பூர்வமான ஒரு கொண்டாட்ட தினமாக கொள்ளாமல் தமது நிலையையும் எதிர்காலத்தையும் பற்றிய தெளிவான சிந்தனையையும் உறுதியையும் பெறுகின்ற தினமாக கொள்ள வேண்டுமென இலங்கையின் தொழிலாள மற்றும் உழைக்கும் மக்களை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேட்டுக் கொள்கிறது

### எங்கப்பன் குதிருக்குள் இல்லை!

புலிகள்
சிறு இயக்கங்கள் தொழிற்சங்கங்களை
தடைசெய்தனர்.
நாம் இது ஜனநாயக விரோதச் செயல்
என்று கண்டித்தோம்.
ஈரோஸ் மௌனமாக இருந்தது.
சிறீசபாரத்தினத்தைக் கொலை செய்து
டெலோவைத் தடைசெய்தனர்
நாம் கர்த்தால் செய்தோம்
ஈரோஸ்—மௌனம்!
புளொட்டை தடைசெய்தனர்
விஜிதரனை கடத்தி கொலை செய்தனர்.
நாம் வெகுஜனப் போராட்டம்
நடத்தினோம்.
ஈரோஸ்—மௌனம் !
எம்மைத் தடைசெய்தனர்
எமது தோழர்களைக் கொன்றனர்.
நாம்...?
ஈரோஸ்—மௌனம்!
இன்று புலிகள் ஈரோஸ் போராளிகளை
கொல்கின்றனர்,
ஈரோஸின் மௌனம் கலைகிறது.
திருவாய் மலர்கின்றனர்-அறிக்கையாக,
''புலிகள் எம்மைக் கொல்லவில்லை!''

**தினகரன்**
**21 - 04 - 1988**

### அறிக்கை

(வவுனியா நிருபர்)

எமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள உறவில் விரிசல்களோ அல்லது மாற்றங்களோ ஏற்படவில்லை. அதேபோல் எமக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கு மிடையில் இணக்கம் ஏதும் ஏற்படவுமில்லை என்று ஈழப்புரட்சி அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

# இனிய தமிழ் மக்களே!...

**எமதினிய தமிழ் மக்களே !**

நாளும் பொழுதும் சாவுகள் துன்பங்கள் என மரணத்தின் மத்தியில் வாழ்க்கை இன்னும் ஓய்ந்தபாடாக இல்லை.

பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம், பல கோண வரிச்சுமைகள்...

அரசாங்க ஊழியர் வேலைக்குப் போகமுடியவில்லை...... கொலை மிரட்டல்... வங்கிகளில்லை, அரசாங்க நிறுவனங்கள் செயற்படவில்லை... இதனால் உரிய சம்பளத்தையும் பெறமுடியாமல்...

உத்தியோகம் உள்ளவன் வீட்டிலும் அடுப்படியில் பூனை படுக்கும் நிலை.

நாளாந்தம் கூலி வேலை பார்த்து வயிறு கழுவும் தொழிலாளர்களுக்கு வேலைக்குப் போக வழியில்லை... வீட்டிலோ வறுமையும் பட்டினியும் கோரத்தாண்டவம் ஆடுகின்றன.

கல்வியையே மூலதனமாகக் கொண்ட பொருளாதார அடித்தளத்தில் நிலைகொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தின் இளம் செல்வங்களின் கல்வி தடைப்பட்டுப்போய் நிற்கின்றது. அவர்களின் எதிர்காலம் சூன்யமயமாக்கப்பட்டிருக்கின்றது.

உயிர்ப்பயமற்றவகையில் எந்தவொரு இடத்திற்கும் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை.

எப்போது, எங்கே, எவ்வளவு பேர், யார் கொலை செய்யப்படுவார்கள் என்று தெரியாத அளவிற்கு கொலைகள் மலிந்துபோய் இருக்கின்றன.

எங்கு பார்த்தாலும் கொலை வெறி பிடித்த துப்பாக்கிப் பைத்தியங்களே நிலைகொண்டு நிற்கின்றன.

போராட்டம் என்று இருந்த காலத்தில்தான் இரத்த ஆறு ஓடியது என்று பார்த்தால்.

இன்று சமாதானம் என்ற காலத்திலும் கொலைக்களங்கள் தானே மிஞ்சி நிற்கின்றன...

தமிழ் மக்களின் வாழ்க்கை இவ்வாறு நிலைகெட்டு, அழிபட்டு, நிம்மதியெதுவுமின்றி எந்த நிமிட நேரமும் அவலக்குரல்களே அதிகரித்துப் போயிருக்கும் இந்த நிலையை மாற்றும் நிலைமையேதும் இல்லையா?

இதுவே எம் அனைவரினதும் முன்னால் உள்ள கேள்வி !

**அன்பிற்கினிய தமிழ் மக்களே !**

இன்றைக்கு இருக்கும் நிலைமைகளோ கொலைகள், துன்பங்கள்: அழிவுகள்...

ஆனால் எம் அனைவருக்கும் தேவைப்படுவதோ ஜனநாயகம், சமாதானம், ஒற்றுமை,

ஆகவே இன்றைக்கு இருக்கும் நிலைமைகளை மாற்றியாக வேண்டும். மாற்றத்தை நாம் ஆக்க வேண்டுமானால் முக்கி முனகுவதில் பயனில்லை.

## கருத்துப் பகிர்வு

யாருடைய நிலைமை எப்படிப் போனாலும் பரவாயில்லை. தன்னைத்தான் காப்பாற்றிக் கொண்டால் சரி என்று நினைக்கும் நிலை மாறவேண்டும்.

இன்றிருக்கும் இந்த நிலைமைக்கு தமிழ்க்குடி மக்கள் ஒவ்வொருவரும் தாம்தாம் எவ்வளவு பொறுப்புடையவர்கள் என்று கண்டறிய வேண்டும்.

அடிப்படையான காரணங்களைச் சரியாகக் கண்டறியாமல், ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் சரியாக உணர்ந்து கொள்ளாமல், மக்களின் நண்பர்கள் யார், மக்களின் விரோதிகள் யார் என்பதை அடையாளம் கண்டு ஒவ்வொருவரும் செயற்படாமல் விட்டால் இன்றைய நிலையை மாற்றவே முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டம், தமது கையில் அதிகாரம் கிடைக்கும்வரை தமிழ் மக்களின் வாழ்க்கையை அழித்தொழிப்பது என்று கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்திய அரசாங்கமோ புலியைப் பிடித்தல் என்ற பெயரில் வெண்கலக்கடைக்குள் யானை புகுந்த வகையாகச் செயற்பட்டு வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கமோ புனர்வாழ்வு, புனரமைப்பு, சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தல் ஆகிய எல்லாவற்றையும் மூடிக்கட்டி வைத்துவிட்டு வடக்கு கிழக்கு நிலைமைகளைப் பார்த்துக் கைக்கொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கின்றது.

இவற்றிற்கிடையில் அகப்பட்டுப்போயிருக்கும் நமது நிலையோ, ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டிற்குமிடையில் அழகிய கலைமான் என்ற கணக்கில்தான் ஆகிப்போயிருக்கின்றது.

தமிழ்மக்கள் ஒருகாலத்தில் தமக்கிடையில், சிங்களமக்களைப் பார்த்து 'சிங்கள மோடயா' என்று கூறிக்கொண்டிருந்த அந்தத் தறிகெட்ட தற்பெருமை வார்த்தைப் பிரயோகங்களை எண்ணிப்பார்க்க எமக்கே வெட்கமாக இல்லையா?

இன்றைக்கு தமிழனைப் பார்த்து இந்த உலகம் முழுவதும் 'மடையர்கள்' என்று கூறிய நிலைமைக்கு நாம் உள்ளாகியிருக்கிறோமே... இந்த நிலைமைக்கு யார் காரணம்?

**தலைமைவெறி, அதிகாரவெறி, கொலைவெறி பணவெறி; புகழ்வெறி** ஆகிய இலட்சியங்களைக் கொண்ட பிரபாகரன் கும்பலானது.

தமிழ்மக்களின் நிலைமை குறித்தோ, எதிர் காலத்தைப் பற்றியோ கொஞ்சம்கூடக் கவலைப் படுவதாகவோ, அக்கறைப்படுவதாகவோ இல்லை.

இந்தக் கும்பல் முதலில் தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒற்றுமையைச் சீர்குலைத்தார்கள்.

பின்னர், தம்மை மட்டும் தனிப்பிரதிநிதியாக அங்கீகரிக்கும்படி இந்திய அரசிடம் பின்கதவால் பிச்சைகேட்டுத் திரிந்தது மட்டுமல்லாது, அதற்கு ஈடாக ஈழப்போராட்டத்தை விலைபேசி விற்றார்கள்.

ஈழமும் வேண்டாம் போராட்டமும் வேண்டாம் எம்மை நிம்மதியாக வாழவிட்டால் போதும் என மக்கள் முடிவுக்கு வந்துநின்ற வேளையில்...

அதையும் விட்டார்களா... எவள் எவனோடு போனாலென்ன பூசாரிக்குக் காப்பணம் என்பதாக தமது கொள்ளைக்கார அதிகாரத்தை துப்பாக்கி முனையில் மீண்டும் நிலைநாட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

ஆடத்தெரியாதவளுக்கு மேடை சரியில்லையாம் என்ற கணக்கில் மக்களைச் சந்திப்பதற்குத் துணிவற்றவர்கள்;

மக்களின் தீர்ப்பை நேர்மையோடு ஏற்றுக்கொள்வதற்குத் திராணியற்றவர்கள்;

மக்களைத் துப்பாக்கிமுனையில் அடக்கியாண்டு பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் ஜீரணிக்க முடியாமற் போனது.

ஜனநாயக சமாதான சக்திகளைப் புறக்கணித்து விட்டு புலி வாலைப்பிடித்துக்கொண்டு வெற்றி உலா வந்த இந்தியா-

அதே புலி கடிக்கத் தொடங்கியவுடன் வாலைப் பிடித்துக்கொண்டிருக்கவும் முடியாமல் விடவும் முடியாமல் ததிங்கிணத்தோம் போட்டுக்கொண்டிருக்கின்றது.

**பாசமிகு தமிழ் மக்களே !**

'தானா எல்லாம் மாறும் என்று சகித்திருப்போம்' என்று இல்லாமல், எம் அனைவருக்கும் எது தேவையோ,

அவற்றை நிலைநாட்டும் மாற்றத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதியோடு செயற்படுவோம். ○

# நடந்தது என்ன?

29-03-88 அன்று வவுனயாவிலிருந்து மன்னாருக்கு நிராயுத பாணிகளாகச் சென்று கொண்டிருந்த எமது தோழர்களான ஐயா (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர்) அவர்களும், பாபுவும் முருங்கனுக்கு அருகாமையிலுள்ள இசைமாலைத்தாழ்வு எனுமிடத்தில் வைத்து ஆயுதந்தாங்கிய புளொட் இயக்கத்தினரால் கடத்தப்பட்டனர்.

எதுவித காரணமுமில்லாமல், அடுத்த நாள் எமது முருங்கன் பொறுப்பாளர் சாரங்கனும், அவருடன் மற்றும் நான்கு தோழர்களும் ஆயுதமுனையில் சுற்றி வளைத்த புளொட் இயக்கத்திரால் எமது முருங்கன் அலுவலகத்தில் வைத்து கடத்தப்பட்டனர்.

எமது தோழர்கள் கடத்தப்பட்டமைக்கான காரணத்தினை அறிந்துகொள்ள நாம் பல வழிகளிலும் முயன்றோம். சகோதர இயக்கத்தினர் என்று நாம் கருதியிருந்த புளொட்டின் தலைமையைச் சந்தித்துப் பேசுவதற்கு மன்னார், வவுனியா, கொழும்பு, இந்தியா, லண்டன் எல்லா இடங்களிலும் முயற்சிகள் செய்தோம். உடனடியாக புளொட் இயக்கத்தினர் எல்லோருமே எல்லா இடங்களிலும் ஒளித்துக் கொண்டனர்.

இதற்குள் முருங்கனிலிருந்து கடத்தப்பட்ட எமது தோழர்களான சாரங்கன், தங்கேஸ், ரவிபபா மற்றுமொரு தோழரையும் 02-04-88 அன்று பெரியதம்பனையில் பலவித சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்ததற்கு அடையாளமான வடுக்களோடு சடலங்களாகக் கண்டெடுத்தோம்.

இதன்பின்னும் எமது மத்திய குழு உறுப்பினரான தோழர் ஐயாவுக்கும் தோழர் பாபுவுக்கும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு புளொட் தலைவர்களுடன் பேச முயற்சிகள் செய்தோம்.

வவுனியா மன்னாரில் புளொட் அலுவலகங்கள் மூடப்பட்டு முக்கிய தலைவர்கள் காடுகளுக்குள் ஆயுதபாணிகளாகச் சென்று விட்டனர்.

04-04-88 அன்று கொழும்பில் புளொட்டின் வெகுஜன அமைப்புத தலைவரான எஸ். ஆர். எனப்படும் சிவராமைச் சந்தித்துப் பேசத் தொடர்பு கொண்டபோது, அவர் எம்மைச் சந்திக்க மறுத்து விட்டார்.

இந்தியாவிலும் லண்டனிலுமிருந்து புளொட் முக்கியஸ்தர்கள் இங்குள்ள தமது தலைவரான உமாமகேஸ்வரனுடன் பேசி எப்படியும் தோழர் ஐயாவை மீட்டுத் தருவதாக அங்கிருந்த எமது தோழர்களிடம் உறுதி கூறினார்.

இதற்கிடையில் 03.04.88 அன்று வவுனியாவிலிருந்து எமது தோழர்களையும், புளொட்டின் தலைமை தவிர்த்த மற்றைய உறுப்பினர்களையும் அமைதிப் படையுனர் கைது செய்தனர். அச்சமயமு

புளொட் உறுப்பினர்கள் அமைதிப்படை முன்னிலையில், எமது தோழர்கள் ஏழு பேரைக் கடத்தியது உண்மையெனவும், அதில் ஐவரைக் கொலை செய்துவிட்டதாகவும், தோழர் ஐயாவையும் பாபுவையும் எப்படியும் திருப்பித் தருவதாகக் கூறினர்.

ஆனால், இவை எல்லாம் நடந்தபிறகும்...

06.04.88 அன்று இரவு எமது தோழர் ஐயா புளொட் இயக்கசிதினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட பின்னர் வவுனியா-மன்னார் வீதியில் எறிந்து கிடக்கக் காணப்பட்டார்.

இதன் பின்னர் — 08.04.88 அன்று.

கடத்தி ஏழு நாட்களின்பின் கொலைகலைச் செய்து முடித்த புளொட்டின் வன்னிப்பிராந்தியைத் தலைமை 'முருங்கனில் நடந்த அதிர்ச்சிக்குரிய சம்பவம்' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் முதலைக் கண்ணீர் வடித்தது. நடத்திய கொலைகளை நியாயப்படுத்தத் தேவையான சம்பவங்களைக் கற்பனை செய்துகொண்டு, தப்பும் தவறுமாய் தங்களைத் தாங்களே காட்டிக் கொடுத்துவிடும் பொய்களோடு அந்தத் துண்டுப் பிரசுரமும், பின்னர் 17.04.88 சண்டே டைம்ஸ் பத்திரிகையில் புளொட்டின் தலைவர் உமாமகேஸ்வரனின் அறிக்கையும் வெளியானது.

08.04.88 அன்று வன்னிப் பிராந்திய புளொட் வெளியிட்டிருந்த அறிக்கையில், முருங்கனில் தமது இரு முஸ்லிம் ஆதரவாளர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ். கொலைசெய்தது என்று கூறப்பட்டிருக்க, 17.04.88 சண்டே டைம்ஸ் பத்திரிகையில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் மூன்று முஸ்லிம்களை நாங்கள் கொலை செய்ததாகக் கூறுகிறார். பொலிஸ் செய்திகளின்படி முஸ்லிம் ஒருவரே கொலை செய்யப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறின. அதுவும்கூட திரீஸ்டார் என்ற அமைப்பால் செய்ப்பட்டது என்றே கூறின. அத்தக் கொலைக்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இது இப்படியிருக்க, மற்ற இருவரும் கொல்லப்பட்டது பற்றிய இரகசியம் பூராவும்புளொட் தலைவர்களுக்கு மட்டும் தெரிந்திருப்பதில் நமக்கு ஆச்சரியமில்லை.

ஆனால் இப்படித் தட்டுத்தடுமாறி எங்கள்மீது பழிசுமத்த முற்படுவது எப்போது?
எமது மத்திய குழு உறுப்பினரான தோழர் ஐயா உட்பட ஏழு தோழர்களைப் படுகொலை செய்துவிட்டு, அதை நியாயப்படுத்தப் புளொட்டுக்கு காரணங்கள் தேவைப்படுகிறபோதே இந்தக் குளறுபடிகளும் வருகின்றன.

மூன்று புளொட் உறுப்பினர்களை நாம் கடத்தியதாகவும், இந்திய இராணுவத்தின் துணையுடன் புளொட் வீடொன்றை நாம் தாக்கியதாகவும் அந்த மோதலில் புளொட் உறுப்பினர்கள் இருவரும் எமது தோழர் ஒருவரும் இறந்ததாகவும்... இந்த ஆத்திரங்களால் தாம் கடத்தி வைத்திருந்த எமது ஆறு தோழர்களைக் கொலை செய்துவிட்டதாக புளொட் கூறுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் முன்னரே 29.03.88 அன்று எமது தோழர்கள் கடத்தப்பட்டனர் என்பதே புளொட் மறைக்க நினைக்கும் உண்மை.

புளொட்டுடனான நேரடி மோதலில் எமது தோழரோ அன்றிப் புளொட் உறுப்பினர்களோ யாரும் இறக்கவில்லை. கடத்தப்பட்ட அல்லது இறந்த தமது தோழர்களின் பெயர் விபரங்களைக் கூடக் குறிப்பிடமுடியாத புளொட் தலைமை, நயவஞ்சகக் கொலைகளைச் செய்துவிட்டு, தாமே நம்ப முடியாத பொய்களைக் கற்பனையில் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. இதனால் புளொட்டின் வன்னிப்பிராந்தியத் தலைவரின் அறிக்கையும் தலைவர் உமா மகேஸ்வரனின் அறிக்கையும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன.

நாம் இந்திய சமாதானப் படையிடம் புகார் செய்தோம் என்பதும் புளொட் நம்மீது சுமத்துகிற மற்றொரு குற்றச்சாட்டாக அமைந்திருக்கிறது. ஆயுதங்களை அமைதிப்படைவசம் ஒப்படைத்து விட்டோம் என்று கூறிக்கொள்பவர்கள், எமது தோழர்களைப் படுகொலை செய்து தமது அதிகார ஆணவத்தை நிலைநாட்டுவதற்கு வெறியாட்டமிடும்போது, இன்றைய நிலையில் ஓர் அமைதியான ஜனநாயக சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள் இந்திய அமைதிப்படையிடம் புகார் செய்வதைத் தவிர, நாம் என்ன நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்று புளொட் எதிர்பார்க்கிறது?

## ஐயா!

ஓர் உண்மை மனிதனை தோழனை
இழந்தோம்
உன்னோடு எம் தோழர் எழுவரை
இழந்தோம்
உன் சிந்தனையை...செயலாற்றலை
மக்கள்பால் நீ கொண்டிருந்த நேயத்தை...
நயவஞ்சகச் சன்னங்கள் துளைத்துச்
சிதைத்துச் செல்ல...
குறுநில மன்னர் கொண்ட ஆதிக்கக்
கொலைவெறிக்கு இரையானாய்...
தர்மம் இப்போதும் தலைகுனிந்தபடியே
நம்பிக்கைக்குக் கழுத்தறுத்து
மல்லாந்து கிடந்தபடி காறி உமிழ்கின்ற
காரணங்கள் வருகிறது...
தூ! துரோகிகளின் துப்பலில்கூடவிஷம்!

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டமை குறித்து...

*தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களும், மலையகத்தின் ஒரு பகுதியும் உள்ளடங்கிய பிரதேசத்தில் வாழும் ஈழமக்களினது சுயநிர்ணய உரிமைக்காக - ஈழதேசத்தின் சுதந்திரத்துக்காக-புரட்சிகர சமூக மாற்றத்துக்காக...*

*1981ம் ஆண்டு தொடக்கம் மறைமுக இயக்கமாக இருந்து ஆயுதமேந்திய போராட்ட இயக்கத்தை நடத்தி வந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து ஏற்பட்ட புதிய சூழலின் பின்னணியில் இலங்கையின் சட்ட பூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

இலங்கை—இந்திய ஒப்பந்தமானது தமிழ்ப் பேசும் மக்களின் அனைத்து உரிமைகளையும் முழுமையாகப் பெற்றுக் கொடுத்துவிட்டதாக நாம் கருதவில்லை.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபையின் மூலம் எமது மக்களின் சகல உரிமைகளுக்கும் உத்தரவாதம் வழங்கப்பட்டுவிட்டதென்றும் நாம் கருதவில்லை.

மாறாக, மாகாணசபையானது குறிக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட சில அதிகாரங்களையே கொண்டதாக இருக்கின்றபோதிலும் நாம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்தோம், இன்றும் ஆதரிக்கிறோம்

ஏனெனில் —

**மக்கள் அனாவசியமாக எந்தவித குறிக்கோளும் இன்றி நாளும் பொழுதும் மரணத்தின் வாயிலில் வாழ்ந்து கொண்டிருப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்காகவும்.**

**திசைமாறிப் போய்விட்ட ஈழவிடுதலைப் போராட்டமானது ஒரிரு குழுக்களின் சுயநலங்களுக்காகவும், அதிகார வெறிக்காகவும் நடத்தப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவும்,**

**மக்களுக்கு ஒரு இடைக்கால அமைதியை ஏற்படுத்துவதற்காகவும்,**

**அழிந்துபோன வாழ்வையும் தேசத்தையும் புனர்நிர்மாணம் செய்வதற்காகவுமே நாம் அதனை அங்கீகரித்தோம்-ஆதரித்தோம்.**

ஆனால். தமிழீழ விடுதலைப் புலிகளின் குறுகிய பார்வையும், தமது சொந்த நலன்களை மட்டுமே பிரதானப்படுத்துகின்ற, போக்கும் அநியாயமாக மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் மரணத்தின் வாயில் இரையாவதற்கே வழிவகுத்தது.

சரிபிழைகளை விமர்சித்தவர்கள் புலிகளால் கொலை செய்யப்பட்டார்கள்.

மக்கள் வாய்திறக்க முடியவில்லை.

அராஜகக் கொடூரங்கள் தலைவிரித்தாடின.

இவை இன்னும் தொடர்ந்து கொண்டுமிருக்கின்றன.

இந்நிலையில், மக்களை சரியான திசையில் வழிநடத்திச் செல்லவும்,

சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தவும்,

மக்கள் போராட்டங்களினூடாக அராஜகங்களுக்கு முடிவுகட்டவும் தீர்மானம் செய்தோம்.

இந்த அடிப்படையிலேயே எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எம்மை சட்டபூர்வமான அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொண்டுள்ளோம்.

**அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொண்டதன் மூலம், நாம் பாராளுமன்ற ஆசனங்களுக்கோ அல்லது மாகாணசபை கதிரைகளுக்கோ அவசரப்படுகின்றோம் என்று முடிவு செய்து விடமுடியாது.**

**கொலைகாரத்தனமான, கொள்ளைக்காரத்தனமான, அராஜகக் கலாச்சாரங்களிலிருந்து விடுபட்டு மக்கள், ஓர் ஆரோக்கியமான அரசியலை முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஜனநாயக சூழலை ஏற்படுத்தும் பொருட்டே எம்மை நாம் அரசியற்கட்சியாகப் பதிவு செய்து கொண்டுள்ளோம்.**

மக்களின் விருப்பங்களுக்கு மாறாக மக்களின் கருத்துகளுக்கு முரணாக மக்களின் முடிவுகளுக்கு எதிராக ஒரு தனிக்கட்சி ஆட்சி முறையை ஸ்தாபிக்கவோ,

இல்லையேல், கட்டவிழ்த்துவிடப்பட்ட சர்வாதிகாரத்தனமாக அதிகாரக் குதிரையை மக்கள்மீது செலுத்து வதையோ.

நாம்தான் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று மார்தட்டுவதையோ நாம் அங்கீகரிக்கத் தயாராக இல்லை.

மாறாக, மக்களின் பேச்சு உரிமை, போராடும் உரிமை, விமர்சிக்கும் உரிமை, மற்றும் சகல ஜன

(9-ஆம் பக்கம் பார்க்க)

# தோழர் சின்னபாபுவின் கடைசிக் கடிதம்!

தோழர் சின்னபாபு புலிகளால் படுகொலை செய்யப்படுவதற்குச் சில நாட்கள் முன்பாக தனது தோழர் ஒருவருக்கு எழுதிய நீண்ட கடிதத்திலிருந்து சில பகுதிகளை, சின்னபாபுவின் நினைவாக மக்களின் சிந்தனைக்கு முன் வைக்கிறோம்!!



என்னைக் கொலை செய்வதற்குப் புலிகள்தேடித் திரிகிறார்கள் கவனமாய் இருக்கும்படி எழுதியிருந்தாய். சில நாட்களுக்கு வேறு எங்காவது போய் ஒளித்து இருக்கும்படியும் எழுதியிருந்தாய். உனது கடிதத்தில் எனக்கு ஏன் இந்த வேலை என்றும் கேட்டிருந்தாய்.

என்மேலுள்ள அக்கறையினால், நீ இப்படி ஆலோசனைகள் கூறுவது எனக்குப் புரிகிறது. ஆனால் நான் உன்னைக் கேட்கிறேன், நானோ எனது இயக்கத் தோழர்களோ சும்மா இருந்தால் அல்லது ஓடி ஒளிந்து கொண்டால், எமது மக்களுக்கு அமைதியும் ஜனநாயகமும் நிம்மதியான வாழ்வும் கிடைக்குமா? புலிகள் தமது கொலைகாரத்தனத்தை, கொள்ளைகள் அடிப்பதை, மக்களை அடக்கியாள்வதை நிறுத்திக் கொள்வார்களா? மக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கப் படுவார்களா? புலிகள் மற்ற இயக்கப் பொடியளைக் கொலை செய்வதை நிறுத்திக்கொள்வார்களா? எமது மக்கள் தமது நிலைமையை, நமது பிரதிநிதிகளை ஜனநாயக பூர்வமான முறைகளில் தேர்ந்தெடுக்க அனுமதிப்பார்களா? எமது மக்களின் உரிமைகளுக்காக எமது மக்களின் மத்தியிலிருந்து எந்த இயக்கமும் போராடும் ஜனநாயக உரிமையை புலிகள மதிப்பார்களா: நீ என்னுடைய இந்தக் கேள்விகளைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப்பார். நாங்கள் கொலை செய்யப்பட்டுவிடுவோம் என்பதற்காக சும்மா இருப்பது அல்லது ஓடி ஒளிந்து கொள்வது என்றால் சிறிலங்கா அரசு படைகளுக்கு எதிராக நாம் ஏன் போராடினோம்? எமது மக்களின ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதால்தான், எமது இயக்கமும் ஈழ விடுதலை என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடியது.

ஈழ விடுதலை என்பது எமது மக்களின் ஜனநாயக உரிமைகளை முழுமையாக நிலைநாட்டுவதற்காகவும் எமது மக்களுக்கு மகிழ்ச்சியான சுதந்திரமான வாழ்வைப் பெறுவதற்காகவுமே தவிர, வெறும் பெயர்ப் பலகைக்காகவோ அல்லது ஒரு சில தனி நபர்களின் அதிகாரத்திற்காகவோ அல்ல என்பதை எமது இயக்கம் திரும்பத்திரும்ப சொல்லி வந்திருக்கிறது. அதேபோல எமது ஜனநாயக, மக்களினதும் போராடும் இயக்கங்களினதும் உரிமைகளை மறுத்து கொலைகாரத்தனமாகக் கொள்ளைக்காரத்தனமாக, மக்களுக்கெதிரான அடக்குமுறை வேலைகளை புலிகள் கட்டவிழ்த்து விட்டதால் நாங்கள் புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டி உள்ளது.

நண்பா! கொஞ்சம் யோசித்துப்பார்! புலிகளால் எமது மக்கள் எவ்வளவு துன்பப்பட்டு விட்டார்கள், சிறிலங்கா அரசுக்கெதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் நடந்த வேளையில் இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையைச் சீர்குலைத்து, எதிரிகளுக்கு வாய்ப்பைத் தேடிக்கொடுத்தது இந்தப் புலிகள் தானே! போராடுவதற்காகப் புறப்பட்ட 1600 போராளிகளை இதுவரை புலிகள் கொலை செய்திருக்கிறார்கள். இது சிறிலங்கா அரச படைகளினால் கொல்லப்பட்ட போராளிகளின் எண்ணிக்கையை விட அதிகம் என்பது உனக்குத் தெரியுமா? எமது போராட்டத்தை சிறிலங்கா அரசுதோற்கடிக்கவில்லை புலிகள்தானே சீரழித்தார்கள். இவர்கள் தமிழ் மக்களின் எதிரிகளல்லவா? தமிழ் இனத்தின் துரோகிகளல்லவா?

ஈழ விடுதலை என்பதில் ஏனைய இயக்கங்கள் எல்லாம் உறுதியாய் இருந்த நேரத்தில் இந்தப் புலிகள் ஈரோஸ் காரர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு மாகாண சபை அமைப்பை 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற வரலாறு உனக்குத் தெரியுமா? இது எமது மக்களுக்கு புலிகளும் ஈரோஸ்காரர்களும் செய்த பச்சைத் துரோகமல்லவா?

போராளிகளைக் கொலை செய்து ஈழப்போராட்டத்தை சீரழித்ததைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு ஒரு உதாரணத்தை யோசித்துப் பார்.

ஒற்றுமையாய் இருந்த போது கொக்கட்டிச் சோலைக்குள் காலடி எடுத்துவைக்க சிறிலங்கா அரச படைகளால் முடியவில்லை. எம்மீது புலிகள் யுத்தம் நடத்தியதைத் தொடர்ந்து கொக்கட்டிச் சோலையிலிருந்து நாம் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. அதற்குப் பின் சில நாட்களுக்குள்ளேயே சிறிலங்கா அரச படைகள் கொக்கட்டிச்சோலைக்குள் புகுந்து. நூற்றுக்கு மேற்பட்ட மக்களைக் கொலை செய்து குவித்ததை சிந்தித்துப்பார். இப்படி பல உதாரணங்கள் இருக்கு.

......ஈழ தேசிய விடுதலை முன்னணி என்கிற இயக்கங்களின் ஒற்றுமை அமைப்பில் இருந்த வேளையில் இந்தப் புலிகள் எங்களை உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் அவமானப்படுத்திய, பொய்ப் பிரச்

சாரங்களை நடத்திய நேரங்களில் எல்லாம் அன்றைக்கு இருந்த ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காக எவ்வளவு பொறுமையோடு விட்டுக்கொடுத்து நடந்து வந்திருக்கிறோம் என்று திரும்பிச் சிந்தித்துப் பார். சிறிலங்கா அரசப் படைகளினால் இந்தப் புலிகள் வளைக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் நாங்களாகவே உதவிக்குச் சென்று இவர்களை எத்தனை முறைகள் காப்பாற்றியிருக்கிறோம் என்று யோசித்துப் பார். ஆனால் இந்தப் புலிகள் என்ன செய்தார்கள்? தங்களது தலைமை வெறி, பதவி அதிகாரம். பணம் புகழ் இவற்றுக்காக எதையும் செய்தார்கள். மக்களினதும் போராளிகளினதும் தியாகத்தால் வளர்ந்த ஈழப் போராட்டத்தை நாசமாக்கிய கோடாரிக்காம்புகள் அல்லவா?

எமது மக்களின் எதிரிகளிடமிருந்து கிடைத்த பல ஆயிரக்கணக்கான ஆயுதங்களையும், பலகோடிக் கணக்கான ரூபாய்களையும கொண்டு ஏனைய இயக்கப் போராளிகளைக் கொன்றொழித்து விட்டு, தாங்களே பெரிய வீரர்கள் என மார் தட்டினார்கள் ஆனால், சிறிலங்கா அரசுபல முனைகளிலும் தாக்குதல் நடத்தியபோது நின்று பிடிக்க முடியாமல் புறமுதுகு காட்டி ஓடினார்கள ...... கடைசியாக இந்தியா உணவுப் பார்சல்களுடன் வந்து எமது மானத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது, இலங்கை-இந்திய சமாதானம் வந்தது. இந்தியப் படைகள் வந்தன. உடனே இந்தப் புலிகள் தாங்கள் தான் ஏதோ போராடி வெற்றி எடுத்துவிட்டதைப் போல வாகனங்களில், லவுட்ஸ்பீக்கர்களைக் கட்டிக் கொண்டு றோட்டு றோட்டாக தமிழ்த தலைவாகள 40 வருடத்தில சாதிககாததை தாஙகள் 4 வருடத்தில சாதித்து விட்டதாகப் பிரச்சாரம் செய்ததை நீ மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன.

சரி, எவ்வாறாயினும ஒரு அமைதி வந்ததே என்று மககள நிமமதிப பெருமூச்சு விட்டார்கள்; மகிழச்சியோடு வீதிகளில் நடமாடத் தொடங்கினாாகள். ஒரு ஜனநாயக வாழவை அனுபவக்க ஆரம்பித்தார்கள. ஆனால் இந்தப புலிகள் விட்டார்களா?

தங்கள் அதிகார அட்டகாசம் செல்லுபடியாகாமல் போய்க்கொணடிருப்பதைக் கண்டார்கள. தாங்கள் செய்த தியாகங்களை மககள் மறந்து விட்டார்கள் என்று சொல்லத் தொடங்கினார்கள். ''மக்கள் நன்றி கெட்டவர்கள'' என்று திட்டத தொடங்கினார்கள. மாட்டுக்கு ஒரு வரி, வண்டிக்கு ஒரு வரி, வண்டியில் இருக்கும் விறகுககு ஒரு வரி என்று மக்கள் மீது புலிகள் திணித்து வநத வரிச்சுமைகளுக்கு எதிராக, பகிரங்க கொள்ளைகளுக்கு எதிராக மக்கள் போராட ஆரம்பித்தார்கள். எமது இயக்கம் நடத்தி வந்த பகிரங்க கூட்டங்கள் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சியை உருவாக்கி வந்தன. இதெல்லாம் கண்ட புலிகள் மக்கள் தீர்ப்புகளையும், மக்களின் அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கையையும் ஜீரணிக்க முடியாமல், மீண்டும் கொலை வெறி பிடித்து அலையத் தொடங்கினார்கள். கொலை, கொள்ளை நடவடிக்கைகளை காட்டுமிராண்டித் தனமாக நடத்தினார்கள். கொலை நடவடிக்கைகளையும், உண்ணாவிரத நாடகத்தையும் ஒரே நேரத்தில் நடத்தி இடைக்கால அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள்,

இடைக்கால அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும், ஒரு எலக்சனில் மக்களைச் சந்திக்க வேண்டியதைத் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்த புலிகள்—மக்களின் அமைதியான வாழ்க்கையை நிரந்தரமாகக் குலைப்பதென்று முடிவு செய்து கொண்ட புலிகள்—தமது இயக்கத்தவர்கள் சைனட் தற்கொலை செய்ததைச் சாட்டாக கொண்டு இந்திய இராணுவத்தோடு சண்டையைத் தொடங்கினார்கள்.

நண்பா! துவக்கு முனை அதிகாரத்திற்கும் கொலை வெறிக்கும் பழக்கப்பட்டுபபோன புலிகளை, இனி வழமையான வாழ்க்கைக்கு கொண்டுவர முடியாது; மக்களினதோ மற்ற இயக்கங்களினதோ ஜனநாயகத்தை அவர்களால் ஜீரணிக்க முடியாது. யுத்தம் செய்வதே கொலைகள் செய்வதே அவர்களது வாழ்க்கை என ஆகிவிட்டது. கொலை வெறி பிடிதத விசர் நாய்க் கூட்டத்தை என்ன செய்யலாம் என்று நீயே சொல்லு பார்க்கலாம். அந்த கூட்டத்துடன் கூடி வாழ முடியுமா! அந்தக் கூட்டத்திற்கு அதிகாரத்தைக் கொடுத்தால் என்ன நடக்கும்? இனவெறி பிடித்த கூட்டத்தை விட்டுவைத்தால் மக்களின் எதிர்காலம் இருள் சூழ்நததாகவே இருக்கும். தீர்க்கமாக யோசிததுதான நான் செயற்படுகிறேன்.

நானுறுக்கும் மேற்பட்ட எமது இயக்கத் தோழர்கள் மக்களின் ஜனநாயகத்திறகாகவும், சமாதான வாழ்வுக்காகவும், மகிழ்ச்சியான எதிர்காலததிற்காகவுமே போராடி மறைந்திருக்கிறார்கள். அவர்களது பாதையிலேயே நானும் செயற்படுகிறேன். நான எபபோதோ இறக்கப்போவது உண்மை. அது எனது மக்களின் நலவாழ்வுக்காக உழைத்து நான் இறநதேன் என்று இருக்கட்டும்;

புலிகள் எனக்கு 'காட்டிக்கொடுத்தான்' என்றோ சமூக விரோதி' என்றோ பட்டம் சூட்டுவார்கள். 'புரட்சி வீரர்களுக்கு, மக்களுக்காக வாழ்ந்தவர்களுக்கு போராடியவர்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல அதிகார வெறியர்—கொலை வெறியர்கள் இப்படித் தான் பட்டம் சூட்டுவார்கள். புலிகள் இவ்வாறாக எத்தனை நல்ல மனிதர்களுக்கு இந்தப் பட்டத்தைச் சூட்டி விட்டார்கள் புதூர் மகா வித்தியாலய அதிபர் திரு. தர்மலிங்கம், பழுகாமம் மகா வித்தியாலய ஆசிரியர் திரு; குணரத்தினம், தொழில்நுட்பவியலாளர் திரு. சுந்தரலிங்கம், அம்பிளாந்துறை விசேட சேவை உத்தியோகத்தர் திரு. சுந்தரநாயகம் இவர்களெல்லாம் கூட புலிகளின் பட்டியலில் துரோகிகள்

## தோழர் சின்ன பாபுவின்...

தானே...... ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், கிராமங்களுக்கு சேவை செய்பவர்கள் ஆகிய எல்லோரும் துரோகிகள்...... புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களுமே தியாகிகள்! புலிகளின் ''துரோகிகள்'' பட்டம் சூட்டும் விடயம் ஒன்றும் எமது மக்களுக்குப் புதிதல்ல ஆனால், வரலாறு யார் தியாகி யார் துரோகி என், புதை நிச்சயம் சொல்லும் என்பது எனது நம்பிக்கை புலிகளால் அதனைத் தீர்மானிக்க முடியாது.

புலிகளின் அதிகாரத்தில் சுகபோகம் அனுபவித்த புலிகளின் ஆதரவாளர்களும், ஈரோஸ் கும்பலும் புலிகளின் அழிவு கண்டு கிலி கொண்டு 'யுத்த நிறுத்தம்...... யுத்த நிறுத்தம்..... என்று கத்துகிறார்களே, இவர்கள் உண்மையில் மக்களுக்கு அமைதியும் நிம்மதியும் கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலா இப்படித் தவிக்கிறார்கள்?

இன்றைக்கு யுத்த நிறுத்தம் வேண்டும் என்று கேட்கும் இவர்கள் ஏனைய இயக்கப் போராளிகளும், சாதாரண பொது மக்களும் புலிகளால் வீதி வீதியாகக் கொலை செய்யப்பட்டபோது எங்கே போனார்கள்? புலிகள் ஏனைய இயக்கப் பெடியன்களின் தலைகளை அறுத்து அவர்களின் தாய்மாரின் மடியில் போட்டபோது, போராளிகளை டிரக்டர்களில் கட்டி இழுத்துக் கொலை செய்தபோது, தலைவேறு கால் வேறு கை வேறாக துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்தபோது, மரங்களிலும் சுவர்களிலும் அடித்துக் கொன்றபோது...... இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் புலிகளுக்கு கொக்கோகோலா வாங்கி கொடுத்துக் குதூகலம் கொண்டாடியவர்கள்—இன்று மக்களுக்கு ஜனநாயகம் கிடைக்கப் போகிறதே, மக்கள் பூட்டப்பட்ட வாயைத் திறந்து நமது உண்மையான கருத்துக்களை வெளியிடப் போகிறார்களே என்று கவலைப்படுகிறார்கள். — அதனால் யுத்த நிறுத்தம் வேண்டும் என்கிறார்கள். புலிகளுக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்படுபவர்களும் கொலைகாரர்களே—மக்களின் விரோதிகளே—ஜனநாயகத்தின் எதிரிகளே—எமது தேசத்தின் துரோகிகளே.

நண்பர் எதிர்காலத்தில் இங்கே இன்று வாய் மூடி மௌனியாகி பயந்து நடுங்கி ஓடி ஒளிந்துபோய் இருக்கும் முற்போக்கு ஜனநாயக சக்திகள், புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்கள், நாளை அவர்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் நிலை ஏற்பட வேண்டுமானால், எதிர்காலப் போராட்டத்தில் ஓரடிகூட முன் வைக்கப்பட வேண்டுமானால். ... இன்று என்னைப் போன்றவர்கள் போராடித்தான் தீரவேண்டும். எல்லோரும் ஓடி, ஒளிந்து மௌனிகளாய் அடங்கி ஒடுங்கி இருந்தால் யார்தான் போராடுவது? யார்தான் கொலை வெறிக் கொடூரத்தை இல்லாமல் செய்வது!

எனக்கு என்ன பட்டத்தை யார் சூட்டுகிறார்கள் என்பது அல்ல எனக்கு முக்கியம். நான் எதற்காக இவற்றை செய்கிறேன் என்பது மட்டும்தான் முக்கியம். அந்த அடிப்படையிலேயே நானும் மற்ற தோழர்களும் செயற்படுகிறோம்......

**உழைக்கும் மக்களின் எதிர்கால விடிவுக்காகவே எனது உழைப்பு அனைத்தும் என்று உறுதியுடனேயே செயற்படுகிறேன்.**

**சின்னபாபு இன்றைக்கு என்ன செய்கிறான் என்பதை எதிர்காலத்தில் நீ புரிந்து கொள்வாய்.**

**உயிரோடு இருந்தால் மீண்டும் சந்திப்போம்.**

## ஈழ மக்கள் புரட்சிகர...

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி

நாயக உரிமைகளையும் மதிக்கும் ஒருமக்களாட்சியை உருவாக்கவே,

மக்களின் முடிவுகளுக்குத் தலைவணங்கி நடக்கவே—நாம் எம்மை ஓர் அரசியற்கட்சியாகப் பதிவு செய்து கொண்டுள்ளோம்.

இனவெறி அரசின் அடாத்தனத்தில் வளர்ந்து விட்ட பாராளுமன்றத்துக்கு உட்பட்ட மாகாண சபையின் ஆட்சியதிகாரத்தின் மூலம், எமது மக்களுக்குத் தேவையான அனைத்தையும் அடைந்துவிடலாம் என்று நாம் முயற்சிக்கவில்லை.

மாறாக, சகல தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து தமிழ்ப்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதும்.

இலங்கையில் வாழும் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒருங்குதிரட்டி சோசலிசப் புரட்சியை முன்னெடுப்பதையுமே நாம் இலட்சிய நோக்கங்களாகக் கொண்டுள்ளோம்.

வேறுசில இயக்கங்களும், தம்மையும் அரசியற் கட்சியாக அங்கீகரிக்குமாறு கோரி மனுச் செய்ததாகவும், ஆனால் அவர்கள் மனுச்செய்ய வேண்டிய காலஎல்லை முடிவடைந்ததால் அவை அங்கீகரிக்கப் படவில்லை என்றும், அவை அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு 1982 ம் ஆண்டு தை மாதம் வரை காத்திருக்கவேண்டியிருப்பதாகவும் அறிகின்றோம்.

எனினும் எமது மக்களுக்கு இன்றைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற சமாதானம், ஜனநாயகம் என்பவற்றை நிலைநாட்ட வேண்டும் என்பதில் உண்மையோடும், தெளிவோடும், உறுதியோடும் உள்ள இயக்கங்கள், அவை அரசியற்கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு காலதாமதமாக வேண்டியிருப்பினும், அதற்காக கடமைகளைப் பின்போடாது. அனைவரும் ஒருமுகமாக செயலாற்ற முன்வர வேண்டுமென வரவேற்கின்றோம். ●

**கொள்ளையர்களுக்கும் கொலை வெறியர்களுக்கும்
உண்மை மனிதர்களைத் தெரிவதில்லை—ஆனால் வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் வீசப்படும்போது
அந்த வெறியர்களை நாயும்கூட தீண்டாது.**

# உளறுவாயன்

## உளறுவாயனின் தர்மநியாயங்கள் யாருக்குப் புரியப்போகிறது?

### அநியாயமாக எனக்கு வாய்த்து விட்ட இந்தப் பெயரைக் கொண்டு என்னை நீங்கள் புறக்கணித்துவிடக் கூடாது...

உண்மையில் ஒரு அரசியல் வாதியை விடவோ அல்லது பிரபலத்திலுள்ள நடுநிலை(?) நாளேடுகளில் எழுதுபவர்களை விடவோ பெரிதாக ஒன்றும் என்னால் உளறிக்கொட்டிவிட முடியாதென்பதை நான் முதலிலேயே ஒப்புக் கொண்டாக வேண்டும்.

நிதானமாக யோசித்து யோசித்துப் பேசுகிற போது, உண்மையை ஒளித்துவைத்துவிட்டுப் பொய்களைப் புனைந்துரைத்து நம்பப்பண்ணிவிடுவது நடக்கும்.

ஆனால், உளறுகிறபோதோ உறங்கிக்கிடக்கிற உண்மைகள் எல்லாம் நிர்வாணத்தோடு குதித்து நம்மை நாணப்படுத்திவிடும். அந்த உண்மைகள் பெரும்பாலும் கசக்கும்.

அவரவர் விருப்பங்கள் பயங்களுக்கேற்ப பூசி மெழுகி வருகிற செய்திகளையெல்லாம் நான் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கிறேன்.

பார்த்து, கேட்டு அறிந்து கொள்கிறவைகளையும், நான் ஆராய்ந்து கண்டுபிடித்து விடுகிற(!) உண்மைகளையும் வெளியே சொல்லிவிடாமல் அடக்கிவைத்துக் கொள்கிற மனப்பக்குவம்-உயிர் பறித்தல் வெகு களுவாய் நடக்கிற இப்போதுங்கூட எனக்கு வரவில்லை.

இதை நான் 'உளறுகிறேன்' என்கிறார்கள்.

**சாத்வீகப் போராட்டம்?**

பாருங்களேன்! உண்ணாவிரதப் போராட்டம் என்பது அகிம்சை, தன்னலம் கடந்த தியாக மனப்பான்மை, இலட்சிய உறுதி என்பவற்றோடு தொடர்பான ஒரு போராட்ட வடிவம் என்கிறோம்.

ஆனால், நடந்து முடிந்த அன்னையர் முன்னணியின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கிற சில உண்மைகள் மனதைச் சங்கடப் படுத்துவதாக இருக்கிறது.

சமகாலத்தில் நடப்பவை பற்றிய சரியான மதிப்பீடுகளைப் பலத்தினாலும், மற்றவர்களின் பயத்தினாலும் மறைக்கப்பட்டுவிட்டாலும்கூட சரித்திரம் அவைகளைக் காலத்துக்குக்காலம் காட்டிக் கொடுத்துக்கொண்டே வருவதை நானும் நீங்களும் தெரிந்து வைத்திருக்கிறோம். இல்லையா...

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 1984 தை மாதம்**

சிறிலங்கா அரச அடக்குமுறைகளை எதிர்த்துக் கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதமிருந்த மாணவர்களை இந்தப் புலிகள் வலோத்காரமாகக் கடத்திச் சென்றதும், இந்த எதேச்சாதிகாரச் செயலுக்கு 'விளக்கமும்' அளித்து மாணவர் போராட்டத்தைக் கொச்சைப் படுத்திய-புலிகளின் தலைவரின் திருமணத்தோடு முடிந்த-தரக்குறைவான நிகழ்வுகளும் இன்னும் யாரும் மறந்திருக்கக் கூடியவையல்ல.

இப்போது மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட அன்னையர் முன்னணி உண்ணாவிரதப் போராட்டமானது, புலிகள் நீட்டியிருக்கும் துப்பாக்கி முனையின் முன்னால் 'துரோகியாகச்சாவதா? தியாகியாகச் சாவதா? இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது' என்ற-இப்போது உண்ணாவிரத அன்னையரிடம் விடுவிக்கப்பட்டிருக்கிற இந்தச் சரித்திரப் புகழ்வாய்ந்த கேள்வியுடனேயே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உண்மை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

அன்னம்மா டேவிட், நேசம்மா வடிவேல் ஆகிய இரண்டு அன்னையர்களுமென ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம், பின்னர் அன்னம்மா டேவிட் அவர்கள் மட்டும் சாகும்வரை உண்ணாவிரதமெனத் தொடர்ந்தது.

மீண்டும் ஒரு அனாவசியச்சாவு நடந்துவிடக் கூடாதென்பதே எல்லோரது பிரார்த்தனையுமாக இருந்தது.

ஏனைய இயக்கப் பொடியளை, ஊர்ப்பிரமுகர்களை, தங்களை காட்டிக்கொடுப்போர் என்று சொல்லிக் கணக்கற்றோரைக் கொலை செய்து வருகிற புலிகளிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டு விடக்கூடாதென்ற அக்கறை இந்த அன்னையர்களுக்கு வந்த பின்னணி எதுவென்பதுதான் எனக்கு விளங்காமலிருந்தது.

ஏனென்றால், இதற்கு முன்னரும்-இப்போதும் பல நூற்றுக்கணக்கான போராளிகளைப் பொது மக்களைப் புலிகள் மிருகத்தனமாக சுட்டும் வெட்டியும் குவித்தபோது இந்த அன்னையர்களின் காருண்ய உள்ளத்தைக் காணக்கூடக் கிடைக்கவில்லையே... எப்படி?

புலிகளின் கொலைகளைக் கண்டித்து அதைத் தடுத்து நிறுத்துவதற்காக உண்ணாவிரதமிருக்கக் கருணையுள்ளத் தாய்மாரோ, முற்போக்கு நெஞ்சங்களோ முன்வருமா என்று கேட்டால்...

இதை உளறுவாயன் புலம்பல் என்று சொல்லி நைஸாக ஒதுங்கி விடப் போகிறீர்கள்! ..ம்...!

**சர்வாதிகாரம் பிழைக்கச் சாகும்வரை விரதம்**

இந்தத் தாய்மாரின் விருப்பத்துடனேயே உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் பட்டதெனவும், அவர்களின் பிள்ளைகள் அருகிலேயே இருக்கிறார்களென்றும் முதலில் பத்திரிகைகள் எழுதின.

ஆனால், தாய் அன்னம்மாடேவிட்டின் உயிரைக் காப்பாற்றித் தருமாறு அவரின் மகனும் இரண்டு மகள்களும் ஈ.பி ஆர்.எல்.எவ். இடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்தமையும், ஈ.பி ஆர்.எல்.எவ். அதற்கான முயற்சிகள் எடுத்தமையும் பின்னர் நடந்தவை.

பிள்ளைகள் தங்கள் தாயைப் பார்ப்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லையாம்.

இறுதியில் இந்திய சமாதானப் படையுடன் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாகச் சென்று தாயைப் பார்த்திருக்கிறார்கள்-தாயின் உயிரைக்

காப்பாற்றித் தரும்படியும் முறையிட்டிருக்கிறார்கள்.

பிள்ளைகளின் வேண்டுகோளுக்கிணங்க அந்தத் தாய் காப்பாற்றப்படுவதற்கிடையில் சிறிது சிறிதாக நஞ்சூட்டி அன்னம்மாவைச் சாகும்படி செய்துவிடவும் உண்ணாவிரதப் பின்னணியினர் முயற்சிகள் செய்ததாகவும் அந்த வட்டாரத்துக்குள்ளிருந்து புகைவதைப் பார்க்கிறோம்.

எது எப்படியோ, மாசி 20ல் ஆரம்பித்த உண்ணாவிரதம் பங்குனி 16ல் முடித்துவைக்கப் பட்டதன் மூலம், ஓர் உயிர் காப்பாற்றப்பட்டதை எண்ணி ஆறுதலடையலாம்.

அன்னையர் முன்னணிக்குள்ளும் பல கசமுசாக்கள் உண்டாகியிருக்கின்றன. அவைபற்றியெல்லாம் இப்போது நான் ஒன்றும் உளறிவிடப்போவதில்லை. இது இப்படியிருக்க இன்னும் பல கூத்துக்களும் நடப்பதாய் தகவல்கள் வருகின்றன.

மட்டக்களப்பு காரைதீவிலிருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். மத்திய கமிட்டி உறுப்பினரின் தாய் தந்தையரையும் புலிகள் இயக்கத்தினர் துப்பாக்கி முனையில் மிரட்டி உண்ணாவிரதமிருக்க வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர்.

இப்போது அந்த ஊரில் பாதுகாப்பிற்காக இந்திய சமாதானப்படை முகாமிட்டிருக்கிறதாம்.

## இழப்புகளும் இறப்புகளும் யாரைப் பாதுகாப்பதற்காக?

துப்பாக்கி முனைக்கும் மின் கம்பத் தூண்களுக்கும் பயந்து, மக்கள் ஞாபகத்தில் வடுக்களாய்ப் பதிந்துவிட்ட பச்சை மட்டை அடி; சந்திக்கொரு துண்டமாய் உடல் வெட்டிப்போடப்படுதல், வாகனங்களில் கட்டித் தெருத் தெருவாய் இழுத்தல், மரத்தில் அடித்துத் தலையைச் சிதறவைத்தல்...என்ற கொடூரங்களுக்குப் பயந்து போயிருக்கும் அன்னையர் மாணவர் அனைவரும் உண்ணாவிரதம், ஊர்வலம் என்று இழுத்து வரப்படுகிறார்கள்.

தங்களுடன் IPKF நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதற்காகப் புலிகள், தங்கள் பாணியிலேயே மக்களைப் பயமுறுத்தி முன்னுக்குத் தள்ளுவதன் மூலம் முயன்று வருகிறார்கள்.

புலிகள்-IPKF உடன் சண்டையை ஆரம்பிப்பதற்கு முன்னால் பேச்சுவார்த்தைகள் நடத்தவில்லையா?

அல்லது, அதற்கு முன்பே ஈழப்போராட்டக் கோஷங்களை யெல்லாம் கைவிட்டுப் புலிகளின் தலைவன் பிரபாகரன் போய் பெங்களூரில் மாகாண சபை குறித்துப் பேசிவிட்டு வரவில்லையா?

இப்போது திரும்பவும் யாருக்காக, என்ன விடயத்தைப் பேசுவதற்காக இவ்வளவு இழப்புகளுக்கும் துன்பங்களுக்கும் மக்களை ஆளாக்கினார்கள்-குகிறார்கள்...ம்.. உங்களுக்கு ஏதாவது விளங்குகிறதா...?

......நமக்கேன் வம்பென்று சும்மா யிருக்க விடாமல் இந்தக் கேள்வியும் என்னுள் துறு துறு வென்று குடைகிறது.

பாவம், திலீபனும் என்ன நெருக்குவாரத்துக்குச் செத்துப் போச்சோ......?

## குப்பைக் கலாச்சார இறக்குமதி

தமிழ்நாட்டின் அரசியல் குப்பைக் குள்ளிருந்து கேவலமான கலாச்சாரப் போக்குகள் இங்கேயும் கொண்டு வரப்பட்டுள்ளன...... வஞ்ச வசூல் கூட்டங்கள்-ஊர்வலங்களுக்கு ஆட்சேர்த்தல், இந்திய நிலப் பிரபுத்துவ அதிகாரத்தனமான பச்சை மட்டை அடி......

கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு அங்கே பணத்தைக் காட்டிச் சேர்க்கப்படுகிற கூட்டம் போல இங்கே ஆயுதப் பயமுறுத்தலின் மூலம் ஊர்வலங்களுக்கும் உண்ணாவிரதங்களுக்கும் மக்களைச் சேர்க்கிற வழிமுறை தொற்றிவிட்டிருக்கிறது.

---

# ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி

EELAM PEOPLES REVOLUTIONARY LIBERATION FRONT

கொழும்பு.
4 - 4 - 99

## பத்திரிகைச் செய்தி

அம்பாறை மாவட்டம் மாளிகக்காடு, சாய்ந்தமருது, சம்மாந்துறை ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் ஆட்கடத்தல், கொலை, எரியூட்டுதல் போன்ற காட்டுமிராண்டித் தனங்களை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் மேற்கண்ட அநாகரீகச் சம்பவங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ந் திகதி, சாய்ந்தமருது காரைதீவுக்கிடையில் ஏற்படவிருந்த இனக்கலவரத்தை நாம் எமது உயிரைப் பணயம் வைத்து தடுத்தோம். என்பதை சாய்ந்தமருது மாளிகைக்காடு மக்கள் நன்குணர்வார்கள்; ஆரம்ப முதலே முஸ்லீம் மக்கள் தமிழ் மக்கள் ஒற்றுமைக்காக நாம் எம்மால் இயன்ற அனைத்தையும் செய்து வந்துள்ளோம். அதுமாத்திரமல்லாமல் முஸ்லீம் மக்களுக்கு நிர்வாக சுயாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை எமது கட்சியில் கொள்கையாகவும் கொண்டுள்ளோம்.

இவற்றை அறியாத சில முஸ்லீம் தலைவர்களும் பிரமுகர்களும் நாமே இவ்விரு மோதல்களுக்கும் காரணம் என்று கூறிவருவது எமக்கு வருத்தத்தையே ஏற்படுத்துகின்றது. எம்மை பொறுத்தவரைக வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பாத சில இனவாத சக்திகளின் தூண்டுதலாலேயே இவை நடைபெறுவதாக நாம் அறிகின்றோம். ஆனால் பத்திரிகைகள் எழுந்தமானமாக பல்வேறுபட்ட இயக்கங்களையும் சமூகங்களையும் குற்றம் சாட்டும் விதத்தில் எழுதி வருவதால் மக்களுக்கு மேலும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே இக்கொலைகள் தீவைப்புக்கள் கடத்தலுக்கான உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்து மக்கள் முன்நிறுத்துவதன் மூலமே மக்களைக் குளப்பங்களில் இருந்து மீட்க முடியும் என்பதுடன் அதனூடாகத்தான் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். எனவே இது தொடர்பான உண்மைகளை கண்டு பிடிக்க தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு விசாரணை கமிசனை சிறிலங்கா அரசு உடன் நியமிக்க வேண்டுமென்று கோருகின்றோம். இவ்விசாரணைக் கமிசனுக்கு எமது கட்சி பூரண ஒத்துழைப்புக் கொடுக்கும் என்று உறுதி கூறுகின்றோம்.

உண்மைகள் தெரியாமல் தவறுகளை வெளியிடுவதானது பிரச்சனைகளை மேலும் மேலும் சிக்கலாக்கும் என்பதை பொறுப்பான பதவிகளில் இருப்போரும் தலைமைத் தானங்களில் இருப்போரும் உணர்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்;

க. பிரேமச்சந்திரன்
(மத்திய குழு உறுப்பினர்)

வெல்க ஈழமக்கள்
புரட்சிகர விடுதலைப் போரராட்டம்!

# பங்குனி 30

இதன் விளைவு, மக்களின் உண்மையான விருப்பங்களும் அபிப்பிராயங்களும் வெளிக்காட்டப் படாதவாறு,

துப்பாக்கி முனையில் ஊர்வலம் செல்லும் மக்களையும், கொலை மிரட்டலுக்குப் பயந்து உண்ணா விரதமிருந்து தியாகிகள் பெயரோடு சாகவேண்டிய நிலைக்கு உள்ளாக்கபடும் மக்களையுமே, ஆயுதப் பயமுறுத்தலின் விளைவாய்க் கடைகளை மூடிக் கர்த்தால் செய்யும் மக்களையும் 'மக்கள் நடவடிக்கைகள்' என்று காணவேண்டிய அவலம் உண்டாகியிருக்கிறது.

விடுதலைப் போராட்டம் நடத்திய நம்மவர்களிடம் (?) ஊர்வலங்களும் உண்ணாவிரதங்களும் இப்படியா கொச்சைப்படுத்தப் பட்டுப் போக வேண்டும்........?

## தமிழ்த்தாய்மாரின் தாலிக் கொடியை அறுப்பதா தமிழர் பண்பாடு.. ?

யாழ்ப்பாணத்தில் பல புலிப் பொறுப்பாளர்கள் இந்திய சமாதானப்படையினரிடம் பிடிபட்டுள்ளமையும், அவர்களில் பலர் இந்தியப் படையினரிடம் தமக்குத் தெரிந்த ஆயுதக் கிடங்குகளையும், சக புலிகளையும் காட்டிக் கொடுத்து வருவதும் புதிய விஷயங்களல்ல.

கீழே நான் தருகிற விபரங்களைச் சற்று உற்றுக் கவனியுங்கள்.

சுதுமலையில் புலிப்பொறுப்பாளர் மயூரனால் காட்டிக்கொடுக்கப்பட்டு IPKF இடம் பிடிபட்டவை. இரண்டு ஜீப் வண்டிகள் நிறைய ஆயுதங்களும், 50 கிலோகிராமுக்கு மேற்பட்ட தங்க நகைகளும்.

கரவெட்டி கப்புதூவில் புலிப் பொறுப்பாளர் சுக்லா காட்டிக் கொடுத்தவை: ஒரு டிரக்டர் பெட்டி நிறைய ஆயுதங்கள்;

நவாலியில் புலி பிரேமன் காட்டிக் கொடுத்தவை: பெருந்தொகையான ஆயுதங்களும் தங்க நகைகளும்;

நீர்வேலியில் புலி உறுப்பினர் ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டவை: 86 தாலிக்கொடிகள் உட்பட பெருந்தொகையான நகைகள் (சிலிண்டர் ஒன்றினுள் இருந்து எடுக்கப்பட்டது);

உடுப்பிட்டியில் 72 தாலிக் கொடிகள் உட்பட பெருமளவு நகைகள் ..

இப்படிப் பல சம்பவங்கள் ..

உங்களிடம் நான் கேட்பது என்னவென்றால், இந்தத் தாலிக் கொடிகள் எல்லாம் புலிகளின் கைகளுக்கு எப்படிப் போயின?

எமது தமிழ்த் தாய்மார்கள் தாலிக்கொடிகளைக் கழற்றித் தானமாய் கொடுக்கிறவர்களாகவா இருக்கிறார்கள்?

தமிழ்ப் பண்பாட்டு மரபுகளில் ஊறிய நம் அன்னையர்களா, தாலிக்கொடிகளைக் கழற்றிப் புலிகளுக்கு அன்பளிப்புச் செய்திருக்க முடியும்?

நிலத்தினுள் புதைத்து வைத்திருந்து இப்போது LTTE யினர் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் கோயில் நகைகளும், அன்னையர் தாலிக்கொடிகளும் அவர்கள் கைக்குப் போனதற்கு என்ன பேர்?

மற்ற இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் 'சமூக விரோதிகள்' என்று பெயர் சூட்டியிருக்கும் புலிகளின் இந்தக் கொள்ளையடிப்புக்கு யார் பேர் சூட்டுவது? என்ன பேர் சூட்டுவது?

உளறுவாயனின் கேள்விகளை நீங்கள் உரக்கச் சத்தம் போட்டுக் கூடப் படித்துவிடக் கூடாது— ஓமோம்! உயிரோடு உங்களுக்கேன் விளையாட்டு?...

யாழ் நகர மக்கள்—

பண்பாடு,கலாச்சாரம், நாகரீகம் என்றெல்லாம் கட்டிக்காத்து, தம்மீது போர்த்துக் கொண்ட பண்புகளனைத்தும் துகிலுரியப்பட்டு புலிகளின் சபையில் நிர்வாணமாக்கப்பட்டனர்.

மாறாத அவமானம் சுமந்து தமிழ்ச் சமூகம் தலை குனிந்தது. வெட்கம்!

ஆம்! அன்று தான் நல்லூர்வீடொன்றில் மற்றொரு வெலிக்கடைவெறியைப் புலிகள் நிகழ்த்திக் காட்டினர்.

நிராயுதபாணிகளாக அடைத்து வைக்கப்பட்ட, விடுதலைக்காகப் போராடவென்று தம் சொந்த பந்தங்கள், ஆசை அபிலாசைகள் அனைத்தையும் விடுத்துவந்த 65 போராளிகளும்—இரண்டு பொது மக்களும் கண்மூடித்தனமாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் புலிகளால் ஒரே இரவில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இரத்தம் வழிந்தோடி, வாசல்வழியே இந்த மண்ணை நனைத்தபோது...இதுவரை தன் மைந்தர்களை எண்ணிப் பெருமிதம் கொண்டிருந்த ஈழத் தாய் தலையிலடித்துத் தன் வயிற்றை நொந்தாள்; எல்லாம் மௌனித்துப்போன இரவில்...புதைகுழிகளில் படுத்துக்கொண்ட—அந்த முகங்களை இழந்த இளம்பிள்ளைகளை மெல்ல அணைத்துக்கொண்டு ஊமையாய் அழுதாள்.

83 ஜூலையில் ... 52 தமிழ்ப்போராளிகளை வெலிக்கடைச்சிறைக் கதவுகளுக்குள் மூடிவைத்து சிங்களக்கைதிகளை ஏவிவிட்டுக் கொலை செய்து வெறியைத் தீர்த்துக்கொண்டது சிறீலங்கா அரசு.

நாகரீக உலகில் நல்லபிள்ளை வேடம் போட முனைந்த இனவெறியர்கள், முகமூடிகிழிந்து உண்மைச்சொரூபம் வெளித்தெரிய விகாரமாக அம்பலமாகி நின்றனர்.

ஆனால்—இவை எல்லாவற்றையும் அற்பமானதாக மாற்றி 'யாவரையும் விஞ்சிய கொலை வெறியர் நாமே!' என்று பிரகடனப்படுத்திக்கொண்டனர் புலிகள்.

சிங்களக்கைதிகளைத் தூண்டிவிட்டு வெளிப் பார்வைக்குத் தன்னை மறைத்துக்கொள்ள முனைந்தது சிறீலங்கா அரசு.

ஆனால், இவர்களோ....!

புலிகள் நடத்திய கைதிகள் பரிமாற்ற ஆர்ப்பாட்டத்தில் வெகு ஆர்ப்பரிப்புடன் வரவேற்று பெரிதாகப் பிரபலப்படுத்தி விடுவித்தெடுத்த மேஜர் அருணா என்பவன்,

தானே துப்பாக்கி தாங்கி நடத்தி முடித்த பெருவேள்வி இது.

நீதி நியாயம்பற்றி யார் கேட்கப்போகிறார்கள்?

எந்த ஜனநாயகக் குரலுக்கு விசாரிக்கும் தெம்பிருந்தது? பிரஜைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக முன் வந்த பிரஜைகள் குழுக்களோ. நீதி சமாதானத்துக்காகக் குரல் கொடுக்க வேண்டிய அமைப்புக்களோ, நடுநிலை நாளேடுகள் என்று சொல்லிக்கொள்ளும் பத்திரிகைகளோ...எல்லாமே துப்பாக்கிக்குண்டுகளுக்குப் பயந்து வாயடைத்துப் போயின.

**அந்த நாள்—பங்குனி முப்பது**
**என்றும் மறக்கப்படாது எம் இதயத்துள்ளிருக்கும்.**

குற்றவாளிகள் எழுதிய தீர்ப்புகளால் கறைப்படுத்தப்பட்ட மனித நியாயங்கள் யாருடைய கண்ணீர்த் துளிகளாலும் கழுவப் படப்போவதில்லை. — இன்குலாப்

இந்தியாவில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: EPIC. P. O. BOX 5551 MADRAS-94.

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் திரு. அ. வ. அருண்மொழித்தேவன் அவர்களினால் 119 பல்கலைக் கழகவீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ சி. ஆர். சி. அச்சகத்தில் 01. 05. 1988 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது